IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.44/2021
DEPOSITION OF WITNESS (PW2)

வா.சா. 2 சாட்சி ஷேக்முகமது த.பெ. அசனார்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 06.02.2025 in accordance with the provisions of Act XX141.**

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்குச் சொத்து சர்வே எண் 27/6 என்றாலும், அதில் 6செண்டைதான் எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரிதான். வழக்குச் சொத்திற்கு தெற்கே உள்ள 2செண்டை எனது சிறியதாயார் 1987ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் தற்போது குடியிருப்பது கீழபள்ளிவாசல் தெரு என்றால் சரிதான்.

2. தாவாச் சொத்திற்கு வடக்கு பக்கம் நான் குடியிருக்கிறேன். எனது தம்பி காதர்மைதீனும் அதே வீட்டில்தான் குடியிருக்கிறார். 2வீட்டிற்கும் தனித்தனி கதவுகள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி மீனாட்சி தெருவிற்கு தென்புறம் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நானும், எனது தம்பி காதர்மைதீனும் குடியிருந்த வீட்டை எனது தந்தை 1977ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

3. மேற்படி அசல் கிரையப்பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தையார்தான் தாவாச் சொத்தை திருமங்கலம் நகர வங்கியில் அடமானம் வைத்து வாதி குடியிருந்து வரும் வீட்டை

கட்டிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை வாங்கிய கடனை 2009ல் அடைத்தார் என்றால் சரியல்ல.

4. நான் என்ன தொழில்செய்து வருகிறேன் என்றால் சைக்கிள் கடை வைத்துள்ளேன். தாவா வழக்கின் 1ம்பிரதிவாதி நெற்களம் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நெற்களத்திற்கு மேற்குபக்கம் வாதி வெல்டிங்வைத்து அடுப்பு தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவாச் சொத்திற்கான மின்சார இணைப்பு, வீட்டுவரி பிரதிவாதி பெயருக்கு மாறியுள்ளது என்றால் தெரியாது.

5. தாவாச் சொத்திற்கு முன்பு வாதி பெயரில் மின்இணைப்பு மாற்றம் செய்வதற்கு அனைவரும் நோட்டரி வழக்கறிஞர் முன்பு சம்மதம் தெரிவித்து கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி கையொப்பம் செய்ததற்கான நகல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை, தம்பியிடம் உள்ளது. பிரதிவாதி எந்த நோட்டரி வழக்கறிஞர் முன்பு கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் எங்கள் ஜமாதில் பதவியில் உள்ளேன் என்றால் சரிதான். துணைச்செயலாளராக 2017ல் இருந்தேன். 2020ல் செயலாளராக இருந்தேன். தாவா வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் என்ன விபரம் கூறி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. 7.2.2007ல் எனது தந்தை எழுதி வைத்த உயிலை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் வாதியின் பெயரில் உள்ள மின்இணைப்பை துண்டிக்க வரும்போது தெரியும்.

7. மேற்படி உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி உயில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் தெரியாது. மேற்படி தேதியில் எனது சிறியதாயார் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால்

தெரியாது. உயிலை பார்க்காமல் உயிலை எனது தந்தையார் எழுதியது இல்லை என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் எனது தந்தை உயில் எழுதிவைக்கவே இல்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு எப்போது திருமணம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது, திருமணத்திற்கு சென்றிருந்தேன்.

8. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2010 ஆகும். 1, 2 பிரதிவாதிகளுக்கு 2009ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் திருமணத்தை எனது தந்தையார்தான் நடத்தி வைத்தார் என்றால் இல்லை. எனது தந்தையார் வாங்கிய கடனை அவர்தான் அடைத்தார் என்றால் சரிதான். எந்த வருடம் கடனை அடைத்தார் என்றால் தெரியாது.

9. எனது தந்தை எழுதிவைத்த உயிலில் நானும், காதர்மைதீனும் இருந்த வீட்டை எங்கள் இருவருக்கும் Aஅட்டவணை பாகமாக கொடுத்தார் என்றால் தெரியாது. எனது தந்தை இறக்கும்வரை 1ம்பிரதிவாதியுடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் குடும்ப அட்டையில் எனது தந்தை பெயர் உள்ளது என்றால் சரிதான்.

10. எனது தந்தை இறக்கும்வரை 1ம்பிரதிவாதியுடன்தான் இருந்தார் என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஜமாத்தில் செயலாளராக இருப்பதை பயன்படுத்தி எனது தந்தைக்கு மனநலம் சரியில்லை என்று போலியாக ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எனது தந்தை மனநலம் சரியில்லாமல் இருந்தார் என்பதற்கான சிகிச்சை எதுவும் எடுத்தாரா என்றால் எடுத்தார். என்ன மருந்து சாப்பிட்டார் என்றால் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள்

சிறியதாயாரின் மகன் என்பதால் வாதியுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு அவரை ஏமாற்ற பார்க்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் குடியிருக்கும் வீட்டை எனது தந்தையின் வாரிசுகளுக்கு பாகம் கொடுக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். நான் உயிலை பார்க்காமலேயே உயில் எனது தந்தை எழுதிவைக்கவில்லை என கூறுவது தவறானது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு மனநலம் சரியில்லை என்பதையும், உயிலை எனது தந்தை எழுதிவைக்கவில்லை என்பதையும் நான்தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என் உடன்பிறந்த சகோதரரான வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி தொழில் செய்வதை இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.